**ஐக்கிய நாடுகள் பெண்பிள்ளைகளுக்கான கல்விக்கான அனைத்துலக பிரச்சார இயக்கம். கல்வி முயற்சிகள்**

## 2011 உலக கல்வி செயற்பாட்டு வாரம் "மாபெரும் கதை" பாடத்திட்டம்

**பெண்பிள்ளைகள், பெண்கள் ஆகிய அனைவரும் கல்வியை பெறுவதை உறுதி செய்வது அவர்களது உரிமை. அந்த உரிமையை இப்போதே நிலைநாட்டுங்கள்**

குறிக்கோள்கள்.

1. மில்லியன் கணக்கான சிறுவர்களும் வளர்ந்தவர்களும் ஒரு போதும் பாடசாலை செல்லும் வாய்ப்பை பெறவில்லை – அவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களும் பெண்பிள்ளைகளுமே என்ற உண்மையை குறித்து கலந்துரையாடுவது.
2. இந்த பின்னணியில் உலகினை ஒரு பால்நிலை கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியதன் அவசியம் தொடர்பான விழிப்புணர்வை பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களை ஊக்குவித்தல்
3. அனைவருக்கும் கல்வி வழங்க உலக தலைவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றவில்லை என்ற விடயத்தை கலந்துரையாடுதல்
4. இது விடயமாக உலகம் முழுவதிலும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக மாணவர்கள் செய்திகளை அனுப்ப முடியும் என்பதை அவர்கள் உணரச்செய்தல்

இந்த பாடத்தை கற்பவர்கள் பாடத்தின் இறுதியில் செய்ய வேண்டியவை.

- பெண்பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதால் ஏற்படும் நன்மைகளையும் அனுகூலங்களையும் புரிந்து கொள்ளுதல்
- உலகின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள பிள்ளைகளின் வாழ்க்கை முறைகளில் உள்ள வேறுபாடுகளை புரிந்துகொள்ளுதல்
- பெண்பிள்ளைகள் பாடசாலை சென்று கல்வி பெறுவதற்கு சாதகமாக உள்ள விடயங்களையும், அவர்கள் பாடசாலை செல்வதற்கு தடையாகவுள்ள விடயங்களையும் புரிந்து கொள்ளுதல்

**பகுதி அ.**

அறிமுகம் 5 நிமிடம்

உலகில் கல்வி கிடைக்காத மில்லியன் கணக்கான பெண்கள் பெண்பிள்ளைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உலகமெங்கிலுமுள்ள பிள்ளைகளும், உலகில் பிரசித்தம் வாய்ந்த பெண்களும் மாபெரும் கதை தொடர்பான பாடத்தில் கலந்து கொண்டிருப்பதை ஆசிரியர் இப்பாடத்தை கற்பவர்களுக்கு விளங்கப்படுத்துவார்.

உலகில் எவ்வளவு தொகையான மக்கள் பாடசாலைக்கு செல்ல முடியாதவர்களாக உள்ளனர் என்பதும் அவர்களில் பெண்களும் பெண்பிள்ளைகளும் எவ்வளவு பேர் என்பது தமக்கு தெரியுமா என ஆசிரியர் தமது வகுப்பிலுள்ள கற்போரிடம் கேட்கிறார்

**ஆசிரியர் பின்வரும் தகவல்களை பிள்ளைகளுக்கு வழங்கலாம்**

- **உலகமெங்கிலும் 72 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்லவில்லை**
- **இவர்களில் 54 விகிதமானவர்கள் (சுமார் 39 மில்லியன்) பெண் பிள்ளைகள் ஆவர்**
- எழுதப்படிக்க தெரியாத வளர்ந்தவர்களில் மூன்றில் இரண்டு பேர் பெண்கள்.

கல்வி கற்காத பெண்பிள்ளை

- குறைந்தவயதில் திருமணம் முடிக்கக் கூடும்
- போசாக்கு குறைவான பிள்ளைகளை பெறுவாள் - நோயினால் பிள்ளைகள் இறப்பார்கள்.
- வறுமையில் வாடுவாள்

அடுத்ததாக விசேடமாக எதையாவது சாதித்த பெண் ஒருவரை அல்லது பெண்பிள்ளைகளை தமக்கு தெரியுமா எனவும், அந்தப் பெண் பாடசாலைக்கு சென்றாரா என ஆசிரியர் கேட்பார்?

**பகுதி ஆ. பால்நிலை வகிபாகமும் கல்வியும்.**

ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கு இடையில் வித்தியாசத்தையும் கல்வியில் எதிர்மாறான தாக்கத்தையும் ஏற்படுத்தும் சூழ்நிலைகளை மாணவர்களால் அடையாளம் காண முடியுமா என கேட்கிறார்?

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெண் பிள்ளைகளுக்கு கல்விக்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் என்ன என ஆசிரியர் கேட்கிறார்.

உயர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் சிறுவர் உரிமை சமவாயம் கலந்தாலோசிக்கப்படலாம்.

- சிறுவர் உரிமை சமவாயம் 1989ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இது மனித உரிமை சாசனத்தில் முதல் முறையாக உள்ளடக்கப்பட்ட சட்டபூர்வமான சர்வதேச ஆவணமாகும்.
- உலகமனைத்திலுமுள்ள சிறுவர்கள் எவ்வித தராதர, மத, இன பாகுபாடும் இன்றி அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க தகுதி உடையவர்கள் என்பதை இந்த சமவாயம் உறுதிப்படுத்துகிறது. இந்த உரிமைகளுக்குள் உயிர் வாழ்தல்; முழுமையான அபிவிருத்தியினை அடைதல்; பாதகமான விளைவுகளான துஷ்பிரயோகம், சுரண்டல் என்பவற்றில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளுதல்; குடும்ப கலாச்சார சமூக வாழ்வில் முழுமையாக பங்குபற்றுதல் ஆகிய உரிமைகள் உள்ளடங்கும். இதைவிட இச்சமவாயம் நான்கு அடிப்படை கோட்பாடுகளை கொண்டுள்ளது. அவையாவன பாகுபாடு காட்டாமை, சிறுவரின் சீரிய நலனுக்கு முக்கியத்துவம் வழங்குதல். உயிர் வாழ்வதற்கான உரிமை, அபிவிருத்தி, சிறுவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் என்பவையாகும்.
- இச்சமவாயத்தை 194 நாடுகள் கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்டிருப்பதன் மூலம் இச்சமவாயத்திற்கு அனைத்துலக ரீதியில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- இச்சமவாயத்தை கையொப்பமிட்டு அங்கீகரித்திருப்பதன் மூலம் நாடுகளின் தலைவர்கள் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தம்மை அர்ப்பணித்துக்கொள்வதாகவும், இவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தமக்குள்ள பொறுப்புக் கூறும் தன்மையையும் சர்வதேச சமூகத்திற்கு முன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இப்போது ஆசிரியர் குறைஅபிவிருத்தி நாடுகளில் பல்வேறு கலாச்சாரங்கள், குறைந்த வாழ்க்கைத் தரம் என்பவற்றின் மத்தியில் வாழும் சிறுவர்களின் நிலமை குறித்து சில தகவல்களை கற்பவர்களோடு பகிர்ந்துகொள்கிறார்.

அடுத்ததாக கல்வியில் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுவதை ஊக்குவிக்க என்ன செய்ய முடியும்? என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்ற விடயத்தை கற்பவரிடம் வினவ வேண்டும்.

அடுத்து ஆசிரியர் கற்பவர்களிடம் அவர்கள் அறிந்த சில தொழில்களைப் பற்றி கேட்டு அத்தொழில்களை முதன்மையாக செய்பவர்கள் ஆண்களா பெண்களா என்று கேட்கிறார்.

அடுத்ததாக ஆசிரியர் கற்பவர்களிடம் வீடுகளில் எவ்வாறான நாளாந்த வேலைகள் செய்யப்படுகின்றன? வெவ்வேறான இவ்வேலைகளை முதன்மையாக செய்பவர்கள் ஆண்களா பெண்களா என்று கேட்கிறார். வீட்டு வேலைகளை இவ்வாறு பிரித்திருப்பது நியாயமா எனவும் கேட்கிறார்.

தங்களுடைய வீடுகளில் அதிக வேலைகள் இருப்பதால் பிள்ளைகள் பாடசாலை செல்ல முடியாது என அவர்களின் பெற்றோர்கள் கூறினால் அது பற்றி அவர்களுடைய உணர்வுகள் எவ்வாறானதாக இருக்கும் என கற்போரிடம் ஆசிரியர் கேட்கிறார்

பாடசாலை செல்ல வேண்டியதன் முக்கியத்துவம் என்ன என்பதையும், சில பிள்ளைகள் அதிலும் விசேடமாக பெண் பிள்ளைகள் பாடசாலை செல்லாதிருப்பதற்கான காரணங்கள் என்ன என்பதை கூறுமாறு ஆசிரியர் கற்போரிடம் கேட்கிறார்.

பிள்ளைகள் இவ்வாறான பதில்களை கூறக்கூடும்

- சில பிள்ளைகள் முரண்பாடுகள் அல்லது மோதல்கள் அல்லது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கிறார்கள்.
- சில கலாச்சாரங்களில் வீடுகளில் நிதி பற்றாக்குறை ஏற்படும் போது பெண்களுடைய கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. பெண் பிள்ளைகள் பாடசாலையில் இருந்து விலகவும், இள வயதில் திருமணம் முடிக்குமாறு தூண்டப்பட்டு வீட்டு வேலைகளை பொறுப்பேற்கவும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.
- சில பிள்ளைகள் பாடசாலை இருக்குமிடத்தில் இருந்து மிகவும் அதிக தூரத்தில் வாழ்வதால் பாடசாலைக்கு செல்வதன் ஆபத்து கருதி வீடுகளில் இருக்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஏனெனில் பிள்ளைகள் விசேடமாக பெண் பிள்ளைகள் துஷ்பிரயோகம், வன்முறைகள் ஆகியவற்றிற்கு இலக்காகலாம்.
- வறுமை – குடும்ப வருமானத்தை கருதி சில பிள்ளைகள் சிறுவர் தொழிலாளர்களாக வேலை செய்து குடும்ப வருமானத்திற்கு உதவி செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.
- சில பிள்ளைகளுக்கு புத்தகம் சீருடை என்பன வாங்குவதற்கு போதிய பணம் இல்லை.
- அவர்களுக்கு பாடசாலை கட்டணத்தை வழங்குவதற்கு பணம் இல்லை.
- சில இடங்களில் பிள்ளைகளை உள்வாங்குவதற்கு போதிய பாடசாலைகள் இல்லை.
- சில இடங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லை.

**பகுதி இ - இந்த நிலைமையை மாற்ற என்ன செய்யலாம். (10 நிமிடங்கள்)**

பெண் பிள்ளைகள் பாடசாலை செல்வதை இலகுபடுத்த என்ன காரியங்கள் செய்யலாம் என ஆசிரியர் கற்போரிடம் கேட்கிறார். பதில்கள் பின்வருமாறு இருக்கக் கூடும்

- அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண் பிள்ளைகளுடைய கல்விக்காக அரசாங்கம் அதிக நிதி மற்றும் உதவிகளை வழங்குதல்.
- பெண் பிள்ளைகளுக்கு அவர்களுடைய அந்தரங்கத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகரித்த சுகாதார வசதிகளை வழங்குதல்.
- பெண் பிள்ளைகள் சமூகத்தில் முக்கியத்துவம் குறைந்தவர்கள் என்ற நிலைமையை உருவாக்கும் சூழ்நிலைகளை அகற்றுதல்
- கல்வி பெறுவதற்காக அறிவிடப்படும் பாடசாலை கட்டணம் மற்றும் மறைமுகமாக அறவிடப்படும் கட்டணங்களை நீக்குதல்.
- பெண்கள் பெண் பிள்ளைகளின் கல்விக்காக பரிந்துரை செய்வதற்கு அதிக ஆண்களையும், ஆண் பிள்ளைகளையும் ஊக்குவித்தல்.

ஆசிரியர் முழு வகுப்பிலும் பின்வரும் கேள்விகளை கேட்கிறார். பாடம் கேட்க வந்திருப்போர் மத்தியில் அரசியல்வாதிகள் இருந்தால் அவர்களையும் சில வினாக்களுக்கு விடை கூறுமாறு சொல்லவும்

- o உலகில் எவ்வளவு தொகையான சிறுவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையில் உள்ளனர் என்பது தெரியுமா?
- o கல்வி பெறுவதில் அதிக வாய்ப்பு குறைந்த பகுதியினராக இருப்பவர்கள் யார்?
- o கல்வி கற்று பிரபல்யம் வாய்ந்தவராக விளங்கும் ஒரு பெண்ணுடைய பெயரை கூறுங்கள்?
- o கல்வி ஏன் முக்கியமானது என்பதற்கான சில காரணங்களை கூறவும்.

- o ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் கல்வியை மேம்படுத்த வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

பகுதி ஈ - செயல்பாடு (30 நிமிடம்)

பெண் பிள்ளைகளுக்கு கல்வி வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அதற்கான காரணங்களையும் பற்றி சிந்திக்குமாறு ஆசிரியர் கற்போரிடம் கூறுகிறார்.

“பெண் பிள்ளைகள் கல்வி கற்பது எவ்வாறு எல்லோருக்கும் உதவுகிறது?” இக்கேள்விக்கான பதிலை எழுத்து வடிவில் அல்லது சித்திரம் மூலம் அல்லது வேறொரு வகையில் தெரிவிக்குமாறு கற்போரிடம் கூறவும்.

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள சித்திரம் வரைதல் போட்டி தொடர்பான அறிவித்தல் உள்ள இணைப்பை பார்க்கவும். (சித்திரப் போட்டி சுய விருப்பத்தின் பேரில் நடத்தப்படக் கூடியது) சிறுவர்கள் வரைந்த சித்திரங்களை தமது பாடசாலைகளில் வைத்துக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கேள்விகளுக்கு சிறுவர்கள் பின்வரும் பதில்களை வழங்கக் கூடும்.

- கல்வி கற்கும் ஒரு பெண் பிள்ளை கற்ற பெண்ணாக வளர்வதுடன் சுகதேகியான, பொருளாதார ரீதியாக வளமடைந்தவராக இருப்பார். அவருடைய பிள்ளைகள் அநேகமாக பாடசாலை செல்வார்கள்.
- கல்வி கற்ற பெண்கள் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் மேலான சுகாதார கவனிப்பை வழங்குவார்.
- இள வயது திருமணங்கள் தள்ளிப் போவதுடன் எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் குறையும்.

இறுதியாக ஆசிரியர் பெண் பிள்ளைகள் உட்பட அனைவருக்கும் கல்வி வழங்குவதால் ஏற்படும் நன்மைகளை விளங்கப்படுத்துவதற்கு உதாரணங்களை கொடுக்கிறார். சில உதாரணங்கள் வருமாறு.

- கல்வி கற்றவர்கள் சுகதேகிகளாக இருப்பர். ஏனென்றால் அவர்கள் வாழ்க்கையில் தங்கள் சுகநலனை பாதுகாக்கும் விடயங்களை தேர்ந்துகொள்வதோடு சுகமாக வாழ்வதற்கான அறிவினை பெற்றிருப்பார்கள்.
- கல்வி பட்டினியை வெற்றிக்கொள்கிறது. கல்வி கற்ற பெண்களுடைய பிள்ளைகள் நல்ல போஷாக்குள்ளவர்களாக இருப்பார்கள்.
- கல்வி உயிர்களை பாதுகாக்கிறது.
- கல்வி கற்ற தாயாருக்கு பிறந்த குழந்தைகள் ஐந்து வயது வரை உயிர் வாழ்வதற்கான வாய்ப்புக்கள் கல்வி கற்காத தாய்மார்களின் பிள்ளைகளை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- கல்வி வறுமையை முடிவுக்கு கொண்டுவர உதவுகிறது

இறுதியாக ஆசிரியர் வகுப்பில் உள்ளவர்களிடம் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பாடசாலை செல்லும் வாய்ப்பை இல்லாமல் செய்திருப்பது நியாயமானதா? என்று மீண்டும் சிந்திக்குமாறு கேட்கிறார்.